டொயிஸ் வங்கி

குழுமம்

மட்டம் 21, **OGF** கோபுரம், **1A** மத்திய வீதி, கோல் பேஸ், கொழும்பு 2

தொலைபேசி : +94-11-2447062, தொலைநகல் : +94-11-2447067

நிதி அறிக்கைகள்

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான அறிக்கைகள்

கார்ப்பரேட் ஆளுகை

முகாமைத்துவ சபை

நிறுவனத்தின் நலன்களுக்கென பேண்தகு தன்மையுள்ள பெறுமதியை உருவாக்கும் நோக்கத்துடன் டொயிஷ் முகாமைத்துவ சபையானது சட்டம், கூட்டிணைப்பு விதிகள் மற்றும் முகாமைத்துவச் சபைக்கான குறிப்பு விதிமுறைகள் ஆகியவற்றிற்கு அமைவாக நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ளது. பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய பங்காளிகளின் நலன்களை அது கவனத்திற்கொள்கின்றது. வங்கியின் வர்த்தக முகாமைத்துவத்திற்காக முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும். முகாமைத்துவச் சபையானது, குழும முகாமைத்துவச் சபை என்ற முறையில், அனைத்து குழும கம்பனிகள் மீது பொது நிருவாகத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே சீரான வழிகாட்டுதல்களுக்கு அமைய, டொயிஷ் வங்கிக் குழுமத்தை முகாமைத்துவம் செய்கின்றது

முகாமைத்துவச் சபையானது சட்டம் மற்றும் அதன் கூட்டிணைப்பு விதிகளுடாக குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சகல விடயங்கள் தொர்பிலும் தீர்மானங்களை எடுப்பதுடன், சட்ட ரீதியான தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக வழிகாட்டுதல்கள் (இணக்கப்பாடு) இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. அத்தோடு அது போதுமான உள்ளக வழிகாட்டு நெறிகள் மேம்படுத்தப்பட்டு அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது. முகாமைத்துவச் சபையின் கடமைகளில் முக்கியமாக வங்கியின் மூலோபாய முகாமைத்துவமும் வழிகாட்டுதலும், மூலவளங்களின் ஒதுக்கீடு, நிதிக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல், கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் வர்த்தக நிறுவனத்தின் முறையான செயற்பாடு, நிறுவனத்தின் செயற்பாடுகளின் சூழல்சார் மற்றும் சமூகம்சார் அழுத்தங்களை முறையாக இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தலைப் போன்றே நிறுவனம் சார்ந்த நிருவாகம் என்பனவும் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவச் சபைக்குக் கீழான மட்டத்திலுள்ள சிரேஷ்ட முகாமைத்துவப் பதவி நியமனங்களை, குறிப்பாக, உலகளாவிய முக்கிய செயற்பாட்டுப் பதவிக்குரியவர்களின் நியமனங்களை, முகாமைத்துவச் சபை தீர்மானிக்கின்றது. குழுமத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு ஆட்களை நியமிக்கும்போது, முகாமைத்துவச் சபையானது பல்வகைத் தன்மையைக் கவனத்திற்கொள்வதுடன், முக்கியமாக பெண்களுக்குப் பொருத்தமானதொரு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கும் முயல்கின்றது. (மேலதிக தகவல்களுக்காக இந்த நிறுவனம்சார் நிருவாக கூற்றில் "முகாமைத்துவப் பதவிகள்/ஆண், பெண் ஒதுக்கீட்டில் பெண்களுக்கான பகுதிக்கான இலக்குகள்" பகுதியை பார்க்கவும்.)

முகாமைத்துவச் சபை, நிறுவனத்தின் நன்மைக்காகவும் நம்பிக்கையின் அடிப்படையிலான ஒத்துழைப்பு முறையிலும் மேற்பார்வைச் சபையுடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றது. முகாமைத்துவச் சபை குறிப்பாக, குழுமத்துடன் தொடர்புடைய மூலோபாயம், எதர்பார்க்கும் வர்த்தகக் கொள்கை, திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, இடர் நிலைமை, இடர் முகாமைத்துவம், ஊழியர் அபிவிருத்தி, நன்மதிப்பு மற்றும் இணக்கப்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்கள் தொடர்பாக சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்களினால் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்குள் குறைந்தபட்ச அடிப்படையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடுகின்றது. எமது முகாமைத்துவச் சபையின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விரிவான விபரங்கள் அதன் குறிப்பு விதிமுறைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பு விதிமுறைகளின் தற்போதைய பிரதியை எமது வலைத்தளத்தில் பிரவேசித்து (www.db.com/ir/en/documents.htm) பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்பார்வை சபை

டொயிஸ் வங்கி AG யின் மேற்பார்வை சபையானது முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதுடன், முகாமைத்துவக் குழுவை மேற்பார்வைக்குட்படுத்தி ஆலோசனைகளை வழங்கி வங்கிக்கு அடிப்படையில் முக்கியமான தீர்மானங்களின்போது நேரடியாகவே சம்பந்தப்படுகின்றது. மேற்பார்வை மற்றும் ஆலோசனைகளில் குறிப்பாக பேண்தகு (நிலைபெறு) சிக்கல்கள் உள்ளடக்குகின்றன. மேற்பார்வைக் குழுவானது நம்பிக்கை பற்றிய ஒத்துழைப்புசார் தொடர்புடன் மற்றும் நிறுவனத்தின் நன்மைக்காக முகாமைத்துவ சபையுடன் நெருங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்கின்றது. மேற்பார்வைச் சபை மற்றும் அதன் குழுக்களின் உள்ளக அமைப்பைப் போன்றே அதன் உறுப்பினர்களுக்கான தேவைப்பாடுகள் விசேட மேற்பார்வை தேவைப்பாடுகளுக்குட்பட்டதாக இருப்பதுடன், அது மேலும் நிறுவனம் சார்ந்த நிருவாகம் சம்பந்தமான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு குறைநிரப்பியாகும். ஏனைய விடயங்களிடையே அவ்வாறான தேவைப்பாடுகள் எமது விவேகமான மேற்பார்வை அதிகார சபை போன்ற ஜேர்மன் வங்கியியல் சட்டம் (Kreditwesengesetz), நிறுவனங்களுக்கான ஊதியங்கள் கட்டளைச் சட்டம் (Institutsvergütungsverordnung), ஐரோப்பிய வங்கியியல் அதிகார சபையின் வழிகாட்டுதல்கள் (EBA) மற்றும் ஐரோப்பிய பிணைப் பத்திரங்கள் மற்றும் சந்தை அதிகார சபை (ESMA) மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கியின் நிர்வாக நடைமுறைகள் உள்ளிட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலானவை. தனித்தனி நபர்களுடன் தொடர்பான நிகழ்வுகளின்போது, பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான ஜேர்மன் நிறுவனம்சார் நிருவாகக் கோவையின் (GCGC) பரிந்துரைகளுக்கு மாற்றமாக இருக்கலாம். மேற்பார்வைக் குழுவின் அலுவல் என்னவெனில், கூட்டங்களை தயார் செய்தல் மற்றும் பின்னூட்டலுக்கான அடிப்படைக் கோட்பாடுகளைப் போன்றே அதன் குழுக்கள் உள்ளிட்ட மேற்பார்வை சபையின் உள்ளக நடைமுறைகளுக்கான பொதுச் சட்ட மேற்பார்வை சபை மற்றும் அதன் குழுக்களின் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தற்போதைய பிரதி டொயிஸ் வங்கியின் வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (www.db.com/ir/en/documents.htm). தொலைபேசி ஊடாக, வீடியோ கருத்தரங்குகள் ஊடாக மற்றும் நேரடி வருகை ஊடாக நிதியாண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை மேற்பார்வை சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, ஊழியர் பிரதிநிதிகள் மற்றும் பங்குதாரர்களின் பிரதிநிதிகள் முறையாக ஆரம்பக் கலந்துரையாடல்களை தனித் தனியாக நடாத்துவார்கள்.

மேற்பார்வை சபையானது முகாமைத்துவ சபையுடன் நீண்ட கால அடிப்படையிலான வாரிசுரிமைத் திட்டத்தை தயாரிக்கின்றது. நியமனக் குழுவானது தலைவரின் குழுவுக்கு ஒத்துழைப்பை வழங்குவதுடன், மேற்பார்வைக் குழு வங்கியின் முகாமைத்துவ சபையின் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பதாரிகளை இனங்கண்டுகொள்வதற்கு ஒத்துழைப்பை வழங்குகின்றது. இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு இந்தக் குழு விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்களுடன் பதவிகள் தொடர்பான விபரங்களையும் தயாரிப்பதுடன் எதிர்பார்க்கும் காலப் பகுதியையும் குறிப்பிடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் வெளிவாரியான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக ஆலோசகர்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு பொருத்தமான விண்ணப்பதாரிகள் இனங்கண்டுகொள்ளப்படுவதுடன், கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்படுகின்றன. வெளிவாரியான விண்ணப்பதாரிகளுடன் பதிலீட்டு திட்டம் தவிர முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபையானது உள்ளக விண்ணப்பதாரிகள் பட்டியலொன்றையும் பேணி வருகின்றது. நியமனக் குழு மற்றும் மேற்பார்வைக் குழுவுக்கு முகாமைத்துவ சபையின் வழிகாட்டலின் கீழ் பதிலீட்டுத் திட்டத்திற்காக உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் செயற்பாடு சம்பந்தமாக முகாமைத்துவ சபையினால் நிதமும் அறிக்கைகள் கிடைக்கின்றன. பொருத்தமான வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்காக நியமனக் குழு முகாமைத்துவ சபையின் அனைத்து அங்கத்தவர்களின் அறிவு, திறமை மற்றும் அனுபவம் சம்பந்தமான நடு நிலைமை மற்றும் பல்வகைமை கவனத்திற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக பாலினம், இனம், மற்றும் வயது தொடர்பாக முகாமைத்துவ சபையின் அடிப்படையில் பல்வகைமையை ஊக்குவிப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. மேற்பார்வை சபை, பங்குகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் (AktG) 76 (3 அ) பிரிவுக்கமைய சட்டத்தினால் தேவையான மிகக் குறைந்த ஆண், பெண் பங்கேற்புக்கான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது. 2017 இல் பங்குகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் (AktG) 111(5) பிரிவின் கீழ் காலத்திற்குரிய சட்ட ஒழுங்குவிதிமுறைகளின் அடிப்படையில் மேற்பார்வை சபையினால் 2022 யூன் மாதம் 30 ஆம் திகதியன்று முகாமைத்துவ சபை சம்பந்தமாக 20மு ஆன மிகக் குறைந்த பெண்கள் இலக்கு குறித்துரைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்டியானா ரீலே மற்றும் ரெபெகா ஷோர்ட் ஆகியோர் முகாமைத்துவ சபையின் இரு பெண் அங்கத்தவர்கள் என்பதனால் இந்த இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நியமனக் குழுவின் அலுவல்களை மேம்படுத்தியவாறு தலைவரின் குழுவானது மேற்பார்வைக் குழுவின் முன்மொழிவுக்கான பரிந்துரையை சமர்ப்பிக்கின்றது. இந்த அடிப்படையில், முகாமைத்துவ சபை அங்கத்தவர்களின் நியமனம் சம்பந்தமாக மேற்பார்வை சபையினால் தீர்மானிக்கப்படுகின்றது. முதல் நியமனக் காலப் பகுதி மூன்று வருடங்களாகும். முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் பதவிகளுக்காக ஒரு தடவை அல்லது சில தடவைகள் நியமிக்கப்பட முடியுமென்பதோடு சட்டத்திற்கமைய அது உச்சளவாக ஐந்து வருடங்களாகும். அதனூடாக டொயிஸ் வங்கியின் அவ்வாறான நியமனங்கள் பொதுவாக மூன்று வருடங்களாக இருத்தல் வேண்டும். முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களை நியமிப்பதற்கான முன்மொழிவைத் தவிர, தலைவரின் குழுவும் மேற்பார்வை சபையினால் தீர்மானிக்கப்படும் முகாமைத்துவ சபை அங்கத்தவர்களை நீக்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்.

ஊதியக் கட்டுப்பாட்டுக் குழுவின் முன்மொழிவுகளின் அடிப்படையில் மேற்பார்வைக் குழு முகாமைத்துவ சபையின் ஒவ்வொரு அங்கத்தவர்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில் மேற்பார்வை சபையானது முகாமைத்துவ சபையின் ஒவ்வொரு அங்கத்தவர்களினதும் மொத்த ஊதியத்தை தீர்மானிப்பதுடன், முகாமைத்துவ சபைக்கான இழப்பீட்டை செலுத்தல் முறை சம்பந்தமாக நிதமும் மீளாய்வுக்குட்படுத்தி தீர்வுகளை மேற்கொள்கின்றது.

முக்கியமாக, குழுமத்துடன் தொடர்புடைய மூலோபாயம், எதிர்பார்க்கும் வர்த்தகக் கொள்கை, திட்டமிடல், வர்த்தக அபிவிருத்தி, ஆபத்து நிலைமை, ஆபத்து முகாமைத்துவம், ஊழியர் அபிவிருத்தி, நற்பெயர் மற்றும் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்கள் சம்பந்தமாக சட்டம் மற்றும் நிருவாக வழிகாட்டல்களின் ஊடாக குறித்துரைக்கப்பட்ட விடயப் பரப்பிற்குள் மேற்பார்வை சபைக்கு முகாமைத்துவ சபையின் அறிக்கை கிடைக்கும். மேலும், குழுமத்தின் கணக்காய்வு ஊடாக இனங்கண்டுகொள்ளப்பட்ட ஏதேனும் முரண்பாடுகள் எப்போதும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிவிக்கப்படுவதுடன் பாரிய முரண்பாடுகள் நிலவும் சந்தர்ப்பங்களில் அது பற்றி தாமதமின்றி அறிவிக்கப்படும். அதற்கமைய,முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுடன் தொடர்பாக ஏதேனும் பாரிய கண்டறிதல்கள் மேற்பார்வை சபையின் தலைவருக்கு அறிவிக்கப்படும். மேற்பார்வை சபை மற்றும் முகாமைத்துவ சபை பொது பங்கேற்பு (இடைவினை) நெறிமுறை ஆவணங்கள் மற்றும் விசேட பங்கேற்பு (இடைவினை) நெறிமுறை ஆவணங்களின் தகவல்கள் ஒழுங்குபடுத்தலை பயன்படுத்தித் கொண்டுள்ளன. இதனூடாக மேற்பார்வை சபை அறிக்கைப்படுத்தலை ஒழுங்குபடுத்தல் மாத்திரமன்றி ஏனைய விடயங்களிடையே மேற்பார்வை சபையின் விசாரணைகள் மற்றும் நிறுவன ஊழியர்கள் தொடர்பான தகவல்களுக்கான கோரிக்கைகளைப் போன்றே கூட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கான தயார்படுத்தல்கள் சம்பந்தமான தகவல்கள் பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

மேற்பார்வை சபையின் தலைவர் அதன் முறையான செயற்பாட்டில் தீர்க்கமான அலுவலொன்றை மேற்கொள்வதுடன், இதில் தலைமைத்துவ அலுவலொன்று காணப்படுகின்றது. மேற்பார்வை சபையின் உள்ளக அமைப்பு மற்றும் தொடர்பாடல், மேற்பார்வை சபை அலுவல்களின் ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவ சபையுடனான மேற்பார்வை சபையின் தலையீடு சம்பந்தமாக உள்ளக வழிகாட்டல்களை வெளியிட முடியும். கூட்டங்களிடையே, மேற்பார்வை சபையின் தலைவர் பொருத்தமான பிரகாரம் மேற்பார்வை சபையின் குழுக்களின் தலைவர்கள் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுடன் குறிப்பாக முகாமைத்துவ சபையின் தலைவருடன் நிதமும் தொடர்பை பேணுவதுடன், அவர்களுடன் ஏனைய விடயங்களிடையே டொயிஸ் வங்கிக் குழுமத்தின் மூலோபாய சிக்கல்கள், திட்டமிடல், அதன் வர்த்தகங்களின் அபிவிருத்தி, ஆபத்து நிலைமைகள், ஆபத்து முகாமைத்துவம், ஆபத்து நிருவாகம், கட்டுப்பாடு, இணக்கப்பாடு, ஊதிய முறை, தகவல் தொழில்நுட்பம், தரவுகள் டிஜிட்டல் மயப்படுத்தல் போன்றே முக்கியமான சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றது. மேற்பார்வை சபையின் தலைவர் மற்றும் - அவர்களுடன் தொடர்பாக செயற்பாட்டுப் பொறுப்புக்களில் - மேற்பார்வை சபையின் குழுக்களின் தலைவர்களுக்கான சந்தர்ப்பத்தை மதிப்பீடு செய்தல், டொயிஸ் வங்கிக் குழுமத்தின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்காக குறிப்பாக முக்கிய சந்தர்ப்பங்கள் சம்பந்தமாக முறையே முகாமைத்துவ சபையின் தலைவரால் அல்லது ஏற்புடைய பொறுப்பு வாய்ந்த முகாமைத்துவ சபையின் அங்கத்தவரால் தாமதமின்றி அறிவிக்கப்படும். மேற்பார்வை சபையின் தலைவர் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்பார்வை சபைக்குரிய தலைப்புக்கள் சம்பந்தமாக முதலீட்டுக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன், அவ்வாறான கலந்துரையாடல்களின் உட்பொருள் சம்பந்தமாக மேற்பார்வை சபையினால் நிதமும் அறிவுறுத்தப்படுகின்றது. இவை சூழல்சார், சமூகம்சார் மற்றும் கட்டுப்பாடு (ESG) தலைப்புக்களையும் உள்ளடக்குகின்றது. கணக்காய்வுக் குழுவின் தலைவர் தொடர்ந்தும் கூட்டங்களுக்கு வெளியே கணக்காய்வாளருடன் நிதமும் கலந்துரையாடலை மேற்கொள்வார்.

கொடுக்கல் வாங்கலுக்காக மேற்பார்வை சபையின் அங்கீகாரம் தேவைப்படுகின்ற வர்த்தகங்களின் வகைகள் டொயிஸ் வங்கி AG இன் கூட்டிணைப்பு விதிமுறைகளில் விபரிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்பார்வை சபைக்கு தனது அங்கீகாரம் தேவைப்படுகின்ற மேலதிக கொடுக்கல் வாங்கல்களை விபரிக்க முடியும். மேற்பார்வை சபையானது முகாமைத்துவ சபை இன்றியும் நிதமும் சந்தித்துக்கொள்கின்றன. உரிய கவனத்திற்கொள்ளலின் பின்னர் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் மேற்பார்வை சபைக்கு அல்லது அதன் குழுக்களுக்கு அவர்களுடைய அலுவல்களை நிறைவேற்றுவதற்காக கணக்காய்வாளர்கள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் ஏனைய உள்ளக அல்லது வெளிவாரியான ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுடைய அலுவலை நிறைவேற்றும்போது மேற்பார்வை சபையின் தலைவர் குழுக்களின் தலைவர்கள் மற்றும் மேற்பார்வை சபையின் அங்கத்தவர்களுக்கு முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபை அலுவலகத்தினால் உதவி வழங்கப்படுகின்றது.

சில கூட்டங்களின்போது, நியமனக் குழு மற்றும் மேற்பார்வை சபை மேற்பார்வை சபையின் மதிப்பீடு தொடர்பாக கலந்துரையாடுவதுடன் ஜேர்மன் வங்கியியல் சட்டத்தின் (KWG) 25 ஆவது பிரிவுக்கமைய சட்டத்தினூடாக விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் குறைந்தது வருடாந்தம் நடாத்தப்பட வேண்டுமென்பதோடு ஜேர்மன் நிறுவனம்சார் கட்டுப்பாட்டுக் கோவையின் (GCGC) ஈ 12 பிரிவுக்கமைய அது மேற்பார்வைக்குழுவின் சுய மதிப்பீடாகும். மதிப்பீட்டை உறுதியாக நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் கால அட்டவணை 2022 யூலை 26 ஆம் திகதி மற்றும் 2022 ஒக்தோபர் 25 ஆம் திகதி நியமனக் குழுக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்படும். வெளிவாரியான ஆலோசகர் ஒருவரின் சேவை இந்த சந்தர்ப்பத்தில் கட்டாயமில்லை.

மதிப்பீடானது பிரதானமாக மேற்பார்வை சபை மற்றும் அவற்றின் குழுக்களின் மற்றும் முகாமைத்துவ சபையின் நடவடிக்கைகள் சம்பந்தமாக விரிவான வினாக் கொத்தொன்றின் அடிப்படையில் மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுடன் நியமனக் குழுவின் அங்கத்தவர்களால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வு மற்றும் முகாமைத்துவ சபை மற்றும் மேற்பார்வை சபை ஆகிய இரண்டில் தனி நபர் அங்கத்தவர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இறுதிக் கலந்துரையாடல் மற்றும் மதிப்பீட்டின் பெறுபேறு தொடர்பான அங்கீகாரம் 2023 பெப்ருவரி 01 ஆம் திகதி நடைபெற்ற மேற்பார்வைக் குழுக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டதுடன், பெறுபேறு எழுத்து மூலமாக இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்பார்வை சபை மற்றும் முகாமைத்துவ சபை குறிப்பாக தொழில் தகைமைகள், நபர்கள் பற்றிய நம்பிக்கை, மற்றும் மேற்பார்வை சபை மற்றும் முகாமைத்துவ சபை அங்கத்தவர்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியுமான நேரம் சம்பந்தமான ஒதுக்கீடுகள் இல்லையென்ற மேற்பார்வைக் குழுவின் கருத்தை தொடர்ந்தும் கொண்டிருக்கின்றது.

மேற்பார்வை சபையின் குழுக்கள்

மேற்பார்வைச் சபையானது பின்வரும் எட்டு நிலையான குழுக்களை அமைத்துள்ளது. அவையாவன - தலைவரின் குழு, நியமனக் குழு, கணக்காய்வுக் குழு, ஆபத்துக் குழு, ஒழுங்குபடுத்தல் குழு (இதற்கு முன்னர் ஒன்றிணைந்த குழு) ஊதியக் கட்டுப்பாட்டுக் குழு, மூலோபாயம் மற்றும் பேண்தகு குழு (இதற்கு முன்னர் மூலோபாயக் குழு) மற்றும் தொழில்நுட்பம், தரவுகள் மற்றும் புத்தாக்கக் குழு என்பனவாகும். இக் குழுக்கள் தேவையான அளவுக்கும் தேவையான நேரங்களிலும் தமது பணிகளை ஒருங்கிணைப்பதுடன் தமக்கிடையே ஆலோசனைகளையும் நடத்துகின்றன. குழுக்களின் பணிகள் சம்பந்தமாக குழுக்களின் தலைவர்கள் கிரமமான முறையில் மேற்பார்வைச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். நிலையியற் குழுக்களின் பணிகள் மற்றும் மேலதிக தகவல்கள் தனியான குறிப்பு விதிமுறைகளினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. அதன் தற்போதைய பிரதியை டொயிஸ் வங்கியின் வலைதளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். (www.db.com/ir/en/documents.htm).

தலைவரின் குழு

குழுவின் அங்கத்தவர்களாக, அலெக்சன்டர் வைனென்ட்ஸ் - தலைவர், (2022 மே 19 முதல்), கலாநிதி போல் எத்லெயிட்பர் (2022 மே 19 வரை), டெட்லெப் பொலஸ்ச்செக், பிரேன்க் வெர்னேக், பேராசிரியர் மருத்துவர் நோர்பட் வின்க்கெல்ஜொஹான் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

தலைவரின் குழு மேற்பார்வைச் சபையின் கூட்டங்களை ஆயத்தம் செய்தல் மேற்பார்வைச் சபையின் கூட்டங்களுக்கிடையே தற்போதைய வர்த்தகங்களை வழிநடாத்தல், முகாமைத்துவச் சபைக்கான நீண்டகால பதவி மாற்ற ஒழுங்கைத் திட்டமிடுதல் உட்பட முகாமைத்துவச் சபை உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவிநீக்கம் தொடர்பாக மேற்பார்வைச் சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆயத்தம் செய்தல் முகாமைத்துவச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியத்தைத் தீர்மானிப்பதற்கு மேற்பார்வைச் சபை கொண்டுள்ள தனி அதிகாரத்தினுள் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் ஒய்வூதிய உடன்படிக்கைகளை முடிவுறுத்தல், திருத்துதல் மற்றும் பணிக்கொடை மற்றும் படிகள் கட்டுப்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொள்ளல் முகாமைத்துவச் சபையின் அங்கத்தவராகப் பெயர் குறிப்பிடப்படும் டொயிஷ் வங்கி AG இன் பொது முகாமையாளருக்கான (Generalbevollmächtigter) ஒப்பந்தங்கள் மற்றும் கூ அல்லது ஒப்பந்தங்களுக்கான திருத்தங்கள் சம்பந்தமான கருத்தொன்று தேவையான சந்தர்ப்பங்களில் வெளியிடல், ஸ்டொக் கோப்பரேஷன் சட்டத்தின் 112 ஆவது பிரிவுக்கேற்ப முகாமைத்துவச் சபையின் தற்போதைய மற்றும் முன்னைய உறுப்பினர்களுடனான ஏனைய ஒப்பந்த வர்த்தகங்களை வழிநடாத்தல், முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள் டொயிஷ் வங்கிக் குழுமத்திற்கு வெளியே கொண்டிருக்கும் ஆணையிப்புக்கள், கௌரவப் பதவிகள் மற்றும் விசேட பணிப் பொறுப்புகளை அங்கீகரிப்பதுடன் நியமனக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் என்பன இக் குழுவின் முக்கிய பொறுப்புகளாகும். முகாமைத்துவச் சபையின் தலைவர் மற்றும்.'.அல்லது பிரதம இடர் அதிகாரி ஏதேனும் நலன் முரண்பாட்டைக் கொண்டிருந்தாலன்றி. அவர்களின் ஆலோசனையுடன் முகாமைத்துவ உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட இரகசிய உள்ளகத் தரவுகள் கையளிக்கப்படுவதை அங்கீகரித்தல் ஜேர்மன் ஸ்டொக் கோப்பரேஷன் சட்டத்தின் 114ஆவது பிரிவுக்கேற்ப மேற்பார்வைச் சபை உறுப்பினர்களுடனான ஒப்பந்தங்களை அங்கீகரித்தல் நிறுவன ஆளுகைத் துறையில் மேற்பார்வைச் சபையின் தீர்மானங்களுக்கு ஆயத்தம் செய்தல், மாற்றமடைந்த உண்மைச் சூழல்களை அனுசரிக்கும் வகையில் வருடாந்தப் பிரகடனத்தின் சீராக்கம் குறித்து மேற்பார்வைச் சபையின் சார்பில் தீர்மானம் எடுத்தல் அனுசரிப்புக் பிரகடனத்தின் இணக்கப்பாட்டை ஊர்ஜிதம் செய்தல் என்பனவும் இக் குழுவின் பொறுப்புகளாகும். கணக்காய்வாளர்கள், நிபுணர்கள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் ஏனைய வெளியிட ஆலோசகர்களுடனான ஆலோசனைகள் தொடர்பில் மேற்பார்வைச் சபைக்கும் அதன் குழுக்களுக்கும் ஏற்படும் செலவுகளைக் கருத்திற்கொள்ளுதல் மற்றும் தேவையான இடத்தில் அபிப்பிராயம் வெளியிடுதல் சேதங்களுக்கான உரிமைக் கோரல்களை முன்னெடுப்பது தொடர்பில் அல்லது முகாமைத்துவச் சபையின் தற்போய அல்லது முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக வேறேதும் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் மேற்பார்வைச் சபையின் தீர்மானங்களுக்காகப் பரிந்துரைகளைத் தயாரித்தல் என்பனவும் இக் குழுவின் பணிகளுள் அடங்கும். தலைவரின் குழு தேவையான வேளைகளில் ஒழுங்குபடுத்தல் குழுவின் தலைவரிடமிருந்து நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்.

நியமனக் குழு

நியமனக் குழுவின் தற்போதய உறுப்பினர்கள்: அலெக்சாண்டர் வய்னென்ட்ஸ், (தலைவர்), (2022 யூலை 28), அங்கத்தவர் (2022 மே 19 முதல் 2022 யூலை 28 வரை) மேரி க்ளார்க், (2022 யூலை 28), கலாநிதி போல் எத்லெயிட்பர் (2022 மே 19 வரை), டெட்லெப் பொலஸ்ச்செக், பிரேன்க் வெர்னேக், பேராசிரியர் மருத்துவர் நோர்பட் வின்க்கெல்ஜொஹான் ஆகியோராவர்.

வங்கியின் முகாமைத்துவச் சபைப் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பதாரிகளை அடையாளம் காண மேற்பார்வைச் சபைக்கு உதவுவது இக் குழுவின் பிரதான பொறுப்பாகும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு, குழு முகாமைத்துவ சபையின் அனைத்து அங்கத்தவர்களின் அறிவு, திறமை மற்றும் அனுபவம் பற்றிய சமநிலை மற்றும் பல்வகைமையை கவனத்திற்கொண்டு விண்ணப்பதாரியின் விபரத்துடன் பதவி தொடர்பான விபரத்தை தயாரித்து அவுவலுடன் தொடர்பான காலம், முகாமைத்துவ சபையின் பதில் திட்டம் சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்தி திறன் விருத்தி மற்றும் பல்வகைமை விருத்தி, மேற்பார்வை சபையில் குறைவான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பாலின சமத்துவத்தை (பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்) விருத்தி செய்வதனை நோக்காகக் கொள்ளுதலைப் போன்றே இதனை அடைந்து கொள்ளும் மூலோபாயமாக மேற்பார்வை சபை குழுக்களுக்கு நியமிப்பதற்காக முன்மொழிவுகளை அபிவிருத்தி செய்தல், டொயிஸ் வங்கி AG ன் முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் தொழில் தகைமை, நம்பகத்தன்மை மற்றும் பெற்றுக்கொள்ள முடியுமான காலம் மற்றும் கூட்டு மதிப்பீட்டிற்கான வழிகாட்டலை தயாரித்தலைப் போன்றே ("Suitability Guideline") தகுதிநிலை வழிகாட்டுதல்களில் முகாமைத்துவச் சபை மற்றும் மேற்பார்வைச் சபையின் அமைப்பு, அளவு, நடப்பெண் மற்றும் செயலாற்றுகை சம்பந்தமாக குறைந்தது வருடத்திற்கொரு தடவையாவது நடாத்தப்பட வேண்டிய மதிப்பீட்டின் பயன்பெறு தன்மையை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இது சம்பந்தமாக கூட்டாக முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் போன்றே குறித்த நிறுவன உறுப்பினர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் தொடர்பிலும் குறைந்தது வருடத்திற்கொரு முறை நடாத்தப்பட வேண்டிய மதிப்பீடு தொடர்பாக மேற்பார்வை சபைக்கு பரிந்துரைத்தல் மற்றும் தகுதிநிலை வழிகாட்டுதல்களின் விவரக் குறிப்புக்களுக்கமைய ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சபையின் மற்றும் மேற்பார்வை சபையின் போன்றே ஏற்புடைய நிறுவனங்களின் அங்கத்தவர்களின் மதிப்பீடு